# ஈழ ஆதரவு இயக்கங்கள்மீது மோகன்தாஸ்-தேவாரம்படைபாயும்!

அவமானகரமானதொரு ஆக்கிரமிப்புக் கொலை வெறியாட்டத்தில் யாழ் நகரைக் கைப்பற்றியது இந்திய இராணுவம். பிறகு ஈழத்தின் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் உள்ள சாவகச்சேரி, மன்னார், வவுனியா, வடமராட்சி, திரிகோணமலை, மட்டக்கிளப்பு இன்னும் பிற பகுதிகளில் விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் போரைத் தொடர்கிறது. யாழ்நகரில் பெருமளவு மக்கள் ஆதரவுடன் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும்அதே சமயம் தினசரி 20, 25 புலிகளைக் கொல்வதாகவும், ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றுவதாகவும் பீற்றிக் கொள்ளுகிறது.

ஆனால் செய்வதே வேறு. ஒவ்வொரு பகுதியாக ஊரடங்கு போட்டு விமானங்களில் இருந்து குண்டுவீசி, கவச வண்டிகள்—பீரங்கிகளால் தாக்கி சந்தேகத்துக்குரிய ஈழத் தமிழர் பலரைப் பிடித்து நிர்வாணமாக்கி சித்திரவதை செய்து, பெண்களைக் கற்பழித்து, தினசரி படுகொலைகள் நடக்கின்றன. யாழ்நகரில் ஏற்பட்ட பேரிழப்புக்குப் பழிவாங்கும் வெறியோடு—வக்கிரத்தோடு இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள் தொடர்கின்றன. எனவேதான் ‘‘இந்தச் சமயத்தில் ஒரு நாடோ—அரசாங்கமோ அல்லாத சிறு கும்பலுடன் போர் நிறுத்தம் அறிவிப்பது இந்திய இராணுவத்தின் தார்மீக பலத்தை வீழ்த்தி விடும்’’ என்று மந்திரி அச்சம் தெரிவிக்கிறார்.

நாடாளுமன்றத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட ராஜீவ் கும்பலின் கூட்டாளிகள் வெட்கமின்றி இந்தஅட்டூழியங்களுக்குத் துணைபோகின்றனர். ‘‘உடனடியாகப் போர் நிறுத்தவேண்டும். படை வாபஸ் ஆகவேண்டும்’’ என்று கோரும் சில எதிர்க்கட்சிகள்கூட இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பையோ, அக்கிரமங்களையே எதிர்க்கவில்லை. அப்படிச் செய்வது தேச துரோகம் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. மாறாக இந்திய இராணுவத்தின் ‘‘கட்டுப்பாடு, திறமை, ஒழுக்கம், தியாகம்’’ ஆகியவற்றை எதிர்க்கட்சிகள் போற்றுகின்றன. இழப்புகள், செலவுகள், ஒப்பந்தத்தின் குறைபாடுகள், இலங்கையில் இந்திய இராணுவம் சிக்கிக் கொண்டு விடும் அபாயம் ஆகியவை பற்றிய அச்சமே முக்கியமாகத் தெரிவிக்கப்படுகின்றன. அறவழியிலும் நாடாளுமன்ற—சட்டமன்ற ‘‘உதாரிலும்’’ ஈடுபட்டுள்ள தி.மு.ககூட போர் நிறுத்தத்தையே கோருகிறது—ஆக்கிரமிப்பை எதிர்க்கவில்லை.

‘‘நிபந்தனையன்றி ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு புலிகள் சரணடைய வேண்டும். இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை ஏற்று அமுல்படுத்த வேண்டும்’’ ஆகிய இரு நிபந்தனைகளில் இருந்து கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்காது அடாவடித்தனமாகப் பேசுகிறது ராஜீவ் கும்பல். ‘‘புலிகளை நிராயுதபாணியாக்குவதும், அமைதியை நிலைநாட்டுவதும்’’ தொடரும்; ஈழத் தமிழர்களின் நியாயமான நலன்களைப் பாதுகாப்பது, இலங்கை பிளவுபடாத ஒருங்கிணைந்த நாடாக இருப்பதை உறுதி செய்வது, எல்லாவற்றுக்கும் மேலாக தென் பிராந்தியத்தில் இந்தியாவின் நலன்களை அடைவது—இவையே ஒப்பந்தத்தின் நோக்கம் என்று புளுகுகிறது.

இப்போது இன்னும் பட்டவர்த்தனமாக இலங்கைத் துறைமுகங்களில் இந்திய இராணுவ ஆதிக்கம், திரிகோணமலை எண்ணெய் வயல்களை இந்தியா பயன்படுத்துவது, இலங்கையுடன் தொழில்—இராணுவக் கூட்டு, இலங்கையில் ஒலிபரப்பு, துறைமுகங்கள் ஆகிய வசதிகளை இந்தியாவின் எதிராளிகளுக்கு மறுப்பது ஆகிய இந்திய நலன்கள் ஒப்பந்தத்தின் மூலம் அடைந்திருப்பதாக ராஜீவ் கும்பல் ஒப்புக் கொள்கிறது. இந்த நோக்கங்களுக்காகத்தான் சிங்களர், தமிழ் மக்களின் கடும் எதிர்ப்புக்கிடையிலும், போரும் தனிநபர் பயங்கரவாதச் செயல்களும் ஏராளமானசிவிலியன்களைக் காவு கொண்டபோதும், இந்திய இராணுவம் பேரிழப்புகளையும், தார்மீக வீழ்ச்சியையும் சந்தித்து வந்தபோதும்—மூர்க்கமான ஆக்கிரமிப்புப்போரை பாசிச ராஜீவ் கும்பல் தொடர்கிறது. இனி இலங்கை அரசே எதிர்த்தாலும் அது பின்வாங்காது.

இந்திய ஆக்கிரமிப்புக்கெதிரான இயக்கங்களைத் தொடரும் தமிழக மக்கள் இன்னும் ஒரு விஷயத்தில் விழிப்போடும் எச்சரிக்கையோடும் இருக்க வேண்டும். இதுவரை ஈழ விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதாக நாடகமாடிய பாசிச எம்ஜிஆர் கும்பல் அந்த வேடத்தைக் கலைந்து வருகிறது. ‘‘ஈழப் பிரச்சினை ஒரு வெளிநாட்டுப் பிரச்சினை’’ என்றுகூறிசட்டமன்றத்தில் விவாதிக்கவே மறுக்கும் அதே சமயம் தமது எடுபிடிகளான காளிமுத்து போன்றோரை வாயடைத்துவிட்டு கல்யாணசுந்தரம், பாண்டியன், ஜெயகாந்தன், சோ போன்ற ஆக்கிரமிப்பு ஆதரவாளர்களை முடுக்கி விட்டுள்ளது. அ.தி.மு.க, காங்கிரசு மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் அடங்கிய கூட்டணி கட்டி ஈழ விடுதலைக்கு எதிரான அப்பட்டமான பிரச்சாரம் தொடங்கியிருக்கிறது. அடுத்த கட்டமாக தனது ஏவல் நாய்களான மோகன்தாஸ்—தேவாரம் படையை ஏவி ஈழ விடுதலை ஆதரவு இயக்கத்தின்மீது தமிழகத்தில் ஒரு பாசிச தாக்குதலைத் தொடுப்பதற்கு காத்துக் கொண்டிருக்கிறது. இந்த எத்தணிப்புகள் அனைத்தையும் முறியடித்து இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான இயக்கத்தைப் பரந்து விரிந்த அளவில் நடத்தவேண்டும். ●